www.Padasalai.Net www.CBSEtips.in

A

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

## பத்தாம் வகுப்பு

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 50

பகுதி -1

I. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்) 8×1=8

1) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

2) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

3) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

4) சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாலினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5) மேன்மை தரும் அறம் என்பது
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

6) காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

7) மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்
இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

8) "வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்" இவ்வடி குறிப்பிடுவது
அ) காலம் மாறுவதை ஆ) இடையறாது அறப்பணி செய்தலை
இ) வீட்டைத் துடைப்பதை ஈ) வண்ணம் பூசுவதை

பகுதி -2

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5×2=10

9) பாசவர், வாசவர், பல்நிணவிலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

10) குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

11) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

12) குறிப்பு வரைக - அவையம்

13) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

14) தொடரில் அமைத்து எழுதுக.
அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



15) கலைச்சொல் அறிவோம்.

அ) DOCUMENT ஆ) BELIEF

## பகுதி -3

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3×3=9

16) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டி பொருள் விளக்குக.

17) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

18) 'பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?

ஆ) காருகர் - பொருள் தருக.

இ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

19) 'தூசும் துகிரும்' - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## பகுதி -4


IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3×5=15

20) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

21) மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary Sunlight, Seasonal rains and the fertility of the Soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

22) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி -5

V. விரிவான விடையளிக்கவும். 1×8=8

23) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிவளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)

குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் - கொக்கைப் போல - கோழியைப் போல - உப்பைப் போல இருக்க வேண்டும்- கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி

******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593